# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, THIRUMANGALAM

O.S No.219/2017

P.W. 1 – சாட்சி. பரமன், த.பெ.கருப்பணன், வயது 67

Solemnly affirmed and sworn by Thiru.S.Sadhu Siva Subramanian, Additional District Munsif on 23.06.2026 in accordance with the provisions of Act XX141.

1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1. இந்த வழக்கின் பிரதிவாதிகள் எனக்கு என்ன உறவுமுறை என்றால் எனது அண்ணன் மகன்கள் ஆவார்கள். எனது அண்ணன் பெயர் குருசாமி ஆகும். எனது தந்தைக்கு இரண்டு மகன்கள் என்றால் சரிதான். தாவா சொத்தானது எங்களுக்கு பூர்வீக சொத்து என்றால் சரிதான். பூர்வீக சொத்தானது ஆதியில் சர்வே எண்.98/3 என்பதில் இருந்து பிரிந்து வந்தது என்றால் சரிதான். நான் வீடு கட்டியுள்ள இடம் எந்தெந்த சர்வே எண்களில் வருகிறது என்றால் சர்வே எண்கள் எனக்கு தெரியாது.

2. நான் குடியிருக்கிற வீடும் பிரதிவாதிகளின் வீடும் ஆதியில் எங்களுக்கு தகப்பனார் கருப்பணனுக்கு பூர்வீக அடிப்படையில் கிடைத்தது என்றால் சரிதான். பூர்வீக சொத்தில் எனக்கு சம பாதியும் எனது அண்ணன் குருசாமிக்கு சம பாதியும் கிடைக்கக்கூடியது என்றால் சரிதான். எங்களது பூர்வீக சொத்தை நாங்கள் வாய்க்கரலாக பிரித்துக்கொண்டோம் என்றால் சரிதான். பூர்வீக சொத்தின் வடக்கு பகுதி எனக்கு பிரிக்கப்பட்டது என்றால் சரிதான். எனது சொத்திற்கு தெற்கு பக்கம் எனது அண்ணன் குருசாமிக்கு பாகம் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். எனது சொத்திற்கு வடக்கே திருமால் என்பவரது சொத்து உள்ளது என்றால் சரிதான். எனது அண்ணன் பாகத்திற்கு தெற்கு பக்கம் கிராமத்திற்கு செல்லும் சாலை உள்ளது என்றால் சரிதான். எங்களது வீட்டிலிருந்து கிராம சாலைக்கு வர வேண்டுமெனில் எனது அண்ணனுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தை தாண்டி தான் வர வேண்டும் என்றால் சரிதான்.

3. நானும் எனது அண்ணனும் பொதுபாதைக்கு இடம் ஒதுக்கியுள்ளோம் என்றால் சரிதான். என் வீட்டிற்கு வடக்கே காலியிடமாக 2 அடி நிலத்தை விட்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் எனது வீட்டிற்கு வடக்கே 2 அடி காலியிடம் விட்டுள்ளேன் என்றாலும் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. எனது பங்கும், எனது அண்ணனின் பங்கும் தென் வடலாக மொத்தம் எவ்வளவு அடி இருக்கும் என்றால் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படுவது நான் தாக்கல் செய்த நிரூபணவாக்குமூலம் என்றால் சரிதான். மேற்படி நிரூபணவாக்குமூலத்தில் எனது வீட்டின் நீள, அகலங்களை அடி அளவில் கூறியுள்ளேன் என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி** : 1 மற்றும் 2 பிரதிவாதிகளின் வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில் கையொப்பமிட்டார்.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.06.24 10:28:52 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.